This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# திரை விழுந்த நட்சத்திரம்

எனக்கு தமிழ் சினிமாவைப் பற்றி ஒரு அட்சரம் தெரியாது. எப்போதாவது பார்ப்பேன். வருஷத்துக்கு மூணு படம் பார்த்தால் ஜாஸ்தி. அதுவும் என் மனைவி கட்டாயப்படுத்தி அழைத்து செல்வாள். எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு டெண்டுட்டுக் கொட்டகை உண்டு. அதில்தான் வழக்கம்போல் சென்று உட்காருவோம். சேர் போட்டிருந்தாலும் சப்பளம் போட்டுக் கொண்டு உட்காரவேண்டும். அடிக்கடி நாற்காலிக்கடியில் நாய் ஓடும். கொசுப் பிடுங்கும். ரீலுக்கு ரீல் ஒரு 25 வாட் பல்பு உயிர் பெறும்போது சாஸ்வதமாக பீடிப் புகை பரவியிருக்கும். படம் ஓடிக் கொண்டிருக்கும்போதே முறுக்கும் கடலை மிட்டாயும் விற்பார்கள். ஸவுண்டு சிஸ்டம் தண்ணீருக்குள் வைக்கப்பட்டதுபோல் கேட்கும். கார்பன் அடிக்கடி மங்கும்.

இந்த சூழ்நிலையில் வருஷத்துக்கு மூன்று சினிமாப் பார்த்துக் கொண்டிருந்தவனை ‘விழுந்த நட்சத்திரம்’ என்று ஒரு சினிமாப் படத் தயாரிப்பில் செலுத்தியது எது? விதி!

அந்த விந்தையான கதையைச் சொல்வதற்கு முன் என்னைப் பற்றிய சில குறிப்புகள். எனக்கு நாற்பது வயசு சர்க்கஸ் நிறுவனம் ஒன்றில் பதினைந்து வருஷமா ஒரே பிரிவில் பணி. தியாகராஜர் சொல்லும் ‘ஒக பானம், ஒகபத்தினி’ ரக நடுத்தர வர்க்க பிராமண ராமன் நான். ஒக மகன் வயசு நாலு! என் சம்பளம் ரூபாய் ஆயிரம்; அதில் வாடகை கொடுத்து, பால் கணக்கு முடித்து உப்பு, புளி, சாமான் வாங்கி, அம்மாவுக்கு அனுப்பி, பத்திரிகைகள் கொசுபத்தி, காஸ், வண்ணான், வேலைக்காரி, லொட்டு லொசுக்கு என்று பட்டுவாடா செய்தபின் மாசக் கடைசி எட்டு நாட்களில் மிச்சமிருப்பது யூஷீவலாக ஒரு அழுக்கு இரண்டு ரூபாய் நோட்டும் விரல் நகங்களுமே.

அந்தக் கடைசி நாட்கள் எனக்குப் பிடிக்கும். என் அப்பா விட்டுப்போன பழைய புத்தகங்களையும் கடிதங்களையும் தொந்தரவில்லாமல் வாசித்துக் கொண்டிருக்கலாம். “கன்னிகையர்கள் வயது. பன்னிரண்டு வயதுள்ள கன்னிகை கௌரி, ஒன்பது வயதுள்ள கன்னிகை ரோஹிணி, பத்து வயதுள்ளவள் கன்னிகை, பத்துவயதிற்கு மேற்பட்டவள் ரஜஸ்வலை,” என்று ‘அபிதான சிந்தாமணி’ படிக்கலாம். மனைவி டப்பாவுடன் எங்கும் அனுப்ப மாட்டாள். நான் பாட்டிற்கு வாசலில் பஸ் ஸ்டாண்டில் புதிய மலர்கள் போலப் பஸ் ஏறும் பெண்களை கௌரி, ரோஹிணி, ரஜஸ்வலை, என்று யாருக்கும் உபத்திரவம் இல்லாமல் வரிசைப்படுத்திக் கொண்டிருக்கலாம்.

என் மனைவி திருத்துறைப்பூண்டிப் பெண். நான் சிகரெட் குடிப்பதை சொல்லிக் சொல்லிக் காட்டியே நிறுத்த வைத்தாள். மகனை செல்லம் கொடுக்கமாட்டாள். போலீஸ்காரன் பூச்சாண்டி இந்த ரகங்களில் அப்பாவையும் காட்டி ஒட்டவிடாமல் செய்துவிட்டாள். பையனுக்கு என்னைக் கண்டால் ஒரு சாஸ்வத பேதி. ஏனோ எனக்கும் மகன் மேல் ஒட்டுதல் இல்லை. ஒருவேளை மகளை எதிர்பார்த்து ஏமாந்து போனதாலோ என்னவோ!